ISSN:2583-2379



# திருச்சியும் இரு வள்ளல்களின் கல்விப் புரட்சியும்

*நி. அமிருதீன் M.A M.PHIL, NET*
*உதவி பேராசிரியர் (முதுகலை தமிழ்த் துறை),*
*ஜமால் முகமது கல்லூரி (தன்னாட்சி),*
*திருச்சி. 620020.*

**Mr. Amirudeen M.A. M.Phil., NET**
Assistant Professor,
Jamal Mohamed College, Trichy 620020
Email: amirudeen71@gmail.com

**முனைவர் மு. முஹம்மது ரஃபீக்**
*உதவி பேராசிரியர் (அரபு மற்றும் இஸ்லாமியத் துறை),*
*பி.எஸ்.ஏ. கிரசன்ட் பல்கலைக்கழகம்,*
*வண்டலூர், சென்னை.*

**Dr. Mohamed Rafiq Hasani**
Assistant Professor,
School of Arabic and Islamic Studies,
B.S. Abdur Rahman Crescent Institute of Science & Technology,
Chennai, India.
Email: rafiq@crescent.education

## Abstract:

This article examines the educational and social contributions of two eminent philanthropists—Haji Jamal Mohamed Sahib and Khaja Mian Rawther—who played a pivotal role in advancing Muslim education in South India, particularly in Tiruchirappalli. It highlights their efforts in founding and supporting educational institutions, promoting Qur'an translation projects, and establishing scholarly bodies such as Majlis-ul-Ulama. The study underscores how their vision and philanthropy culminated in the establishment of Jamal Mohamed College, which continues to serve thousands of students, reflecting their lasting legacy in educational reform and social upliftment.

## Keywords:

educational, social contributions, Jamal Mohamed College, Majlis-ul-Ulama, South India

### முக்கிய சொற்கள்

*கல்விப் புரட்சி-சமூக முன்னேற்றம்- மதரஸா ஜமாலியா- திருச்சிராப்பள்ளி- ஜமால் முகமது கல்லூரி- ஆன்மீகமும் கல்வியும்- மஜ்லிசுல் உலமா*

## முன்னுரை

பரந்த இவ்வுலகில் ஒவ்வொரு மனிதனும் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ மற்றவர்களைச் சார்ந்தே வாழ்கின்றான். இப்படி வாழக்கூடிய சமூகச் சூழலில் மனிதர்கள் மகிழ்ச்சியாக வாழ அவர்களுக்கு அறமும் ஒழுக்கமும் அவசியம். அத்தகைய ஒழுக்கத்தை கற்றுத் தருவது கல்வியாகும்.. கல்வி என்பது வெறும் அறிவுப் பரிமாற்றம் மட்டுமல்ல; அது சமூக மாற்றத்திற்கும் முன்னேற்றத்திற்கும் வழிகாட்டும் சக்தியாகும். இந்த உயரிய கல்வி நோக்கத்தை தம் வாழ்நாள் முழுவதும் ஏந்திச் சென்ற பல சான்றோர், வள்ளல்கள் இந்த மண்ணில் தோன்றியுள்ளனர்.

அவ்வரிசையில், தென்னிந்திய முஸ்லிம் சமூகத்தின் கல்வி வளர்ச்சிக்காக தன்னலமின்றி உழைத்த இரு பெரும் கல்வித் தந்தைகள் என்றால் *Haji Jamal Mohamed Sahib* மற்றும் *Khaja Mian Rawther* ஆகியோர் குறிப்பிடத்தக்கவர்களாவர். கல்வி, சமூகம், ஆன்மீகம் ஆகிய துறைகளில் இவர்களின் பங்களிப்பு திருச்சிராப்பள்ளி மட்டுமல்லாது தமிழகம் முழுவதும் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. கல்வி நிறுவனங்கள் நிறுவுதல், மார்க்க அறிஞர்களை ஊக்குவித்தல், திருக்குர்ஆன் மொழிபெயர்ப்பு போன்ற பணிகளுக்கு துணை நிற்றல் ஆகியவற்றின் மூலம் இவர்கள் சமூக முன்னேற்றத்திற்கு உறுதியான அடித்தளத்தை அமைத்தனர்.

இக்கட்டுரை, இவ்விரு வள்ளல்களின் வாழ்க்கை, கல்விச் சிந்தனை, சமூகப் பங்களிப்பு மற்றும் அவர்களின் முயற்சிகளால் உருவான கல்வி நிறுவனங்களின் தாக்கம் ஆகியவற்றை ஆய்வு செய்து, இன்றைய தலைமுறைக்கு அவர்களின் கல்விச் சிந்தனையும் தியாக உணர்வும் எவ்வாறு வழிகாட்டியாக விளங்குகின்றன என்பதை வெளிப்படுத்தும் நோக்கத்துடன் எழுதப்பட்டுள்ளது.

## ஹாஜி ஜமால் முகமது சாஹிப்

சென்னை மாநகரத்தில் *06/01/1882* அன்று பிறந்த இவர் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பப் பகுதியில் தென்னிந்தியாவின் முக்கியமான கல்வியாளராகவும் அரசியல்வாதியாகவும் விளங்கினார். மேலும் அக்காலகட்டத்தில் கல்வி சமூகம் மற்றும் அரசியல் சூழல்களின் அடையாளமாகவும் திகழ்ந்தார். இவருடைய இளம் வயது கல்வி மற்றும் ஒழுக்கங்களைக் கற்றுக் கொள்வதில் கடந்து போனது. இரண்டு வருடங்கள் அரபி

மொழி மற்றும் புனித குர்ஆன் ஆகியவற்றை கற்றறிந்தார் பின்னர் முத்தியால்பேட்டை மேல்நிலைப் பள்ளியிலும் அதற்குப்பின் கிறிஸ்டியன் கல்லூரி உயர்நிலைப் பள்ளியிலும் படித்தார்.

பின்னர் மெட்ராஸ் யுனைடெட் கிளப் என்னும் அமைப்பில் சேர்ந்து பல ஆங்கில மற்றும் இந்திய இதழ்களை வாசிக்கும் இனிமையான அனுபவத்தை பெற்றார் அதே காலகட்டத்தில் உருது மொழியையும் திறம்பட கற்றுக் கொண்டார்

### மதரஸா ஜமாலியா

மக்கள் இஸ்லாமிய நெறிமுறைப்படி வாழ வேண்டும் என்ற எண்ணத்துடன் இவரின் தந்தை ஹாஜி ஜமால் மொய்தின் சாஹிப் அவர்கள் 1898 ஆம் ஆண்டு சென்னை பெரம்பூரில் மதரஸா ஜமாலியா எனும் அரபிக் கல்லூரியை தொடங்கினார். மேலும் அதற்கு எதிரே ஒரு பள்ளிக்கூடத்தையும் தொடங்கினார். தன்னுடைய பெருமளவு நிதியையும் அதற்காக வழங்கினார். கல்விக்காக ஏராளமாக செலவு செய்வதும் கல்வியை பிற மக்களுக்கு வழங்குவதுமான நற்குணங்கள் தந்தையிடமிருந்து மகனார் ஜமால் முகமது சாஹிப் அவர்களுக்கும் கிடைக்கப் பெற்றன.

### மியாசி

முஸ்லிம்களின் மேம்பாட்டிற்காக 1902 ஆம் ஆண்டு சென்னையில் மியாசி(Muslim educational association of South India) தொடங்கப்பட்டது. பின் நாட்களில் சென்னையில் புதுக்கல்லூரி என்னும் பெயரில் முஸ்லிம் தனியார் கல்லூரி இச்சங்கத்தினாலேயே தொடங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்க செய்தியாகும். மேலும் இச்சங்கத்தில் ஜமால் முகமது சாஹிப் அவர்கள் தன்னை ஒரு உறுப்பினராக இணைத்துக் கொண்டு பல்வேறு காலகட்டங்களில் துணைத்தலைவராகவும் பிறகு தலைவராகவும் இருந்து முஸ்லிம்களின் உயர் கல்வி வளர்ச்சிக்கு பல வகைகளிலும் உதவி செய்துள்ளார்கள்.

### வெளிநாட்டு பயணம்

1910 ஆம் ஆண்டு ஜமால் முகமது சாஹிப் அவர்களுக்கு 28 வயது. தன் தந்தையின் வணிகத்தை மேம்படுத்தும் நோக்கிலும் ஐரோப்பிய நாடுகளில் உள்ள தோல் சந்தையின் நுட்பங்களை கற்றுக்கொள்ளும் சிந்தனையுடனும் தந்தை கொண்டு வந்த அரபிக்

*கல்லூரியின் கல்வி முறைகளில் நவீனத்தை புகுத்தவும் இவர் லண்டன் உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளுக்கு பயணம் மேற்கொண்டார். அவர் சந்தித்த பிரித்தானிய மக்களின் நேர்மையை அக மகிழ்ந்து பாராட்டினார்.*

*மேலும் பாரிஸ் ஜெர்மனி பெல்ஜியம் எகிப்து மற்றும் துருக்கி ஆகிய நாடுகளுக்கும் பயணம் செய்து பல்வேறு தொழில்நுட்பங்களையும் செய்திகளையும் அறிந்து கொண்டார். இப்ப பயணத்தில் தான் அவர் தனது ஹஜ் கடமையையும் பரிபூரணமாக நிறைவேற்றினார்.*

*1911 ல் இந்தியா திரும்பியவுடன் ஜமாலியா அரபிக் கல்லூரியில் உள்ள பாடத்திட்டங்களில் பெரும் மாற்றங்களை அறிமுகப்படுத்தினார் அரபுக் கல்வியோடு பொது கல்வி பாடங்களையும் கற்றுக் கொடுக்க வழிவகை செய்தார் மேலும் தமிழை ஒரு பாடமாக ஏற்படுத்தினார். தமிழக முஸ்லிம்கள் குறிப்பாக உயர்கல்வியில் மிகவும் பின் தங்கியிருப்பதை கண்டு ஆழ்ந்த கவலை கொண்டார். அதனால் எப்படி எனும் இஸ்லாமியர்களை கல்வியில் முன்னேற்ற வழிவகை செய்ய வேண்டும் என்று உறுதி கொண்டார்.*

*இஸ்லாமிய ஆன்மீகத்தில் மிகவும் விருப்பம் கொண்ட ஜமால் முகமது சாஹிப் அவர்கள் பல்வேறு அறிஞர்களையும் இஸ்லாமிய ஆன்மீகப் பெரியார்களையும் அழைத்து வந்து இஸ்லாமிய கருத்துக்களை முஸ்லிம்களுக்கு மத்தியில் எடுத்துக் கூற வழிவகை செய்தார். இங்கிலாந்து நாட்டு அறிஞர் பிக் டால் திருக்குர்ஆனை ஆங்கிலத்தில் மொழிபெயர்ப்பு செய்து அது பதிப்பித்து வெளிவர காரணமானவர் வள்ளல் ஜமால் முகமது சாஹிப் அவர்களே.*

## ரூபாய் ஒரு லட்சம் நன்கொடை

*ஜாமியா மில்லியா என்ற கல்வி நிறுவனத்திற்காக 1925 ஆம் ஆண்டு ரூபாய் ஒரு லட்சம் தொகையை முன்னாள் ஜனாதிபதி டாக்டர் ஜாகிர் உசேன் உடன் கொடுத்தார்கள் மேலும் அலிகர் பல்கலைக்கழகம் டெல்லி தேவ்பந்த் மதரஸா மற்றும் நத்வதுல் உலமா மதரஸா போன்றவற்றிற்கு ஏராளமான பண உதவி செய்துள்ளார்கள்.*

*சென்னை மாகாணத்தின் மக்கள் தொகையில் (1931 கணக்கெடுப்பின் படி) 7% முஸ்லிம்கள் இருந்தனர். அதே நேரத்தில் மற்ற மாவட்டங்களில் நான்கு 4% முஸ்லிம்கள் இருந்தனர்.*

## காஜாமியான் ராவுத்தர்

*திருச்சியில் வாழ்ந்து வந்த புகழ்பெற்ற தோழ் வணிகர் மியான் ராவுத்தர் அவர்களின் அருந்தவ புதல்வர் தான் ஹாஜா மியான் ராவுத்தர். இவர் 1880 இல் பிறந்தார்.*

*முகமது மியான் ராவுத்தர் திருச்சி செம்பட்டில் 1883 இல் 7 ஏக்கர் பரப்பளவில் மூன்று தோல் பதனிடும் தொழிற்சாலைகளைக் கொண்டு தோல் வர்த்தகத்தை தொடர்ந்தார். பல்வேறு பள்ளிவாசல்கள் கட்டுவதற்கும் ஏழை எழுதியவர்களுக்கும் நிறைய நிதி உதவி அளித்தார். இவரின் மறைவுக்குப் பிறகு இவரின் அருமை மகனார் காஜா மியான் ராவுத்தர் அவர்கள் தந்தையின் வணிகத்தை தம் தோளில் சுமந்தார். சென்னை கிறித்துவக் கல்லூரி உயர் துவக்கப் பள்ளியில் ஐந்தாம் வகுப்புடன் இவருடைய பள்ளி கனவு தகர்ந்து போனது. இருப்பினும் திருச்சி வந்த பிறகு வணிகம் செய்ததோடு தனது முயற்சியால் தமிழ் உருது ஆங்கிலம் ஆகியவற்றிலும் சிறந்த தேர்ச்சியும் பயிற்சியும் பெற்றார். தம் கடின உழைப்பால் மிகப்பெரும் தொழிலதிபர் ஆனார். பல்வேறு நவீன தொழில்நுட்பங்களை புகுத்தி சுமார் ஒரு கோடி ரூபாய் முதலீடு இருக்கும் அளவுக்கு தன்னுடைய தொழிற்சாலையைச் செம்மையாக நடத்தினார்.*

*இரு பெரும் வள்ளல்கள் ஆன ஹாஜி ஜமால் முகமது சாஹிப் மற்றும் காஜாமுயான் ராவுத்தர் ஆகிய இருவரும் நம் இந்திய நாட்டிற்கும் மக்களுக்கும் நம்முடைய சமூகத்திற்கும் பல சேவைகளை செய்திருக்கிறார்கள் அதில் முக்கியமான மூன்று பின்வருமாறு அமைகின்றது.*

1. *மஜ்லிஸுல் உலமா அமைப்பு*
2. *திருக்குர்ஆன் மொழிபெயர்ப்பு பணிக்காக செய்யப்பட்ட உதவி*
3. *ஜமால் முகமது கல்லூரி*

*மஜ்லிசுல் உலமா*

*ஜமால் முகமது சாஹிபின் தந்தையான ஜமால் முஹிதீன் ராவுத்தர் அவர்களும் காஜா மியான் ராவுத்தரின் தந்தையான என் முகமது மியான் ராவுத்தர் அவர்களும் வேறு சிலரும் இணைந்து திருச்சிராப்பள்ளியில் மஜ்லிஸுல் உலமா என்னும் அமைப்பை 1918 ஆம் ஆண்டு தொடங்கினர். இந்த அமைப்பை ஏற்படுத்துவதற்காக வள்ளல் காஜா மியான் ராவுத்தர் அவர்கள் (தற்போது ஜமால் முகமது கல்லூரி அமைந்துள்ள இடம்) தனக்கு சொந்தமான 124 ஏக்கர் நிலத்தை மஜ்லிஸுல் உலமா சபைக்காக வேண்டி நன்கொடையாக அளித்தார்கள். அதற்காக ஓர் அறக்கட்டளையைத் துவக்கப்பட்டு மேற்கொண்டு பணிகள் நடந்தன.*

*இந்த அறக்கட்டளையில் என் முகமது மியான் ராவுத்தர் அவர்கள் தன் இறுதி நாள் வரை தலைவராகவும் ஜமால் மொகிதின் சாஹிப் அவர்கள் துணைத் தலைவராகவும் இருந்தார். இந்த மஜ்லிசுல் உலமா அமைப்பிற்கான முதன்மை கட்டிடம் கட்டுவதற்காக 1924 ஆம் ஆண்டு ஜமால் முஹைதீன் சாஹிப் தனது சொந்த பணத்திலிருந்து ரூபாய் 25 ஆயிரம் செலவு செய்தார். இன்றைய ஜமால் முகமது கல்லூரியின் முகப்பு கட்டிடம் இதுதான் என்பது குறிப்பிடத்தக்கது.*

*இவர்களின் காலத்துக்குப் பிறகு ஜமால் முகமது சாஹிபும் ராஜாமியான் ராவுத்தரும் மஜ்லிசுல் உலமா பொறுப்புகளை திறம்பட கவனித்து வந்தனர். இந்த அமைப்பானது மார்க்க அறிஞர்களுக்கு திருக்குர்ஆன் மற்றும் நபி மொழிகளை ஆய்வு செய்யக்கூடிய ஆய்வு மையமாக செயல்பட்டது இதன் வழியாக பல்வேறு மொழிகளில் திருக்குர்ஆன் மொழிபெயர்க்கப்பட்டு வெளியிடப்பட்டன.*

*மஜ்லிசுல் உலமாவின் முதல் மாநாடு ஈரோட்டில் 1920 ஆம் ஆண்டு நடைபெற்றது. தொடர்ந்து 1922 1927 ஆம் ஆண்டுகளிலும் மாநாடுகள் தொடர்ந்து நடைபெற்றன. இம்மாநாடுகளின் வெற்றிக்குக் காரணமானவர்கள் இரு பெரும் வள்ளல்கள் தாம்.*

## திருக்குர்ஆன் மொழிபெயர்ப்பு பணி

*ஜனாப் காஜா மியான் ராவுத்தர் தமது செலவிலேயே திருக்குர்ஆனை தமிழில் மொழிபெயர்ப்பதில் முக்கிய பங்கு வகித்தார். அ கா அப்துல் ஹமீது பாகவி அவர்களை நியமித்தார். 1925 இல் ஆரம்பிக்கப்பட்ட இப்பணி 1929 இல் முடிக்கப்பட்டது. உற்ற நண்பர் ஜமால் முகமது சாஹிபின் நிதி உதவியுடன் தொடங்கப்பட்ட அச்சகத்தில் இது அச்சிடப்பட்டு பின்பு வெளியிடப்பட்டது.*

## ஜமால் முகமது கல்லூரி

*பாமர மற்றும் இஸ்லாமிய மக்களுக்காக வேண்டி திருச்சியில் கல்லூரி ஒன்றினை நிறுவ வேண்டும் என்பது ஜமால் முகமது சாஹிப் அவர்களின் நோக்கமாக இருந்தது எனவே திருச்சியின் பெரு வணிகராக திகழ்ந்த காஜா மியான் ராவுத்தர் ரோடு இணைந்து கலந்தாலோசித்து வந்தார்.*

*இடைப்பட்ட காலத்தில் வள்ளல் ஜமால் முகமது அவர்கள் மறைந்து விட்டதால் அவரது ஆசைப்படி அவரது மூத்த குமாரர் எம்ஜே ஜமால் முகையதீன் அவர்கள் கல்லூரி துவக்கும் பணியை தொடர்ந்தார். இதற்குத் தேவையான கட்டிடங்களை ஜமால் முகமது சாஹிப் பின் குடும்பப் பங்களிப்பான ₹ 2,75,000 செலவில் கட்டப்பட்டது.*

*இதன் விளைவாக ஜமால் முகமது கல்லூரி உருவாகி, 11.07.1951 அன்று அப்போதைய சென்னை மாகாண முதலமைச்சர் பி எஸ் குமாரசாமி ராஜா அவர்களால் 250 மாணவர்களுடன் தொடங்கி வைக்கப்பட்டது.*

*அன்று சிறிய அளவில் ஆரம்பிக்கப்பட்ட ஜமால் முகமது கல்லூரி ஆள் போல் தளைத்து இன்று சுமார் பன்னிரண்டாயிரம் மாணவர்களின் கல்வித் தேவையை நிறைவு செய்து வருகிறது. கல்லூரியின் நிர்வாக குழு தலைவராக வள்ளல் ஹாஜாமியான் ராவுத்தர் அவர்கள் 1951 முதல் 1954 ஆம் ஆண்டு வரை பொறுப்பு வகித்தார். அவருடைய நினைவை போற்றும் வண்ணம் கல்லூரியின் முதன்மை மாணவர் விடுதியானது ஹாஜாமியான் விடுதி என்று பெயர் சூட்டப்பட்டு இன்றளவும் அழைக்கப்பட்டு வருகிறது.*

## முடிவுரை

தன்னலமற்ற தலைவர்களால் தான் நாடு செழிப்படையும். நாட்டு மக்கள் வளம் பெறுவர். அவ்வகையில் சற்றும் தன்னலமில்லாத இருவரும் வள்ளல்களான ஹாஜா மியான் ராவுத்தர் மற்றும் ஹாஜி ஜமால் முகமது சாஹிப் ஆகிய இருவரின் கல்விப் புரட்சியால் இன்று பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் மகிழ்ச்சியுடன் வாழ்ந்து கொண்டிருக்கின்றன என்பதில் எள்ளளவும் ஐயமில்லை.

## துணை நின்ற நூல்கள்


- ஜமால் முகமது. இந்திய வர்த்தக இளவரசர் மற்றும் தேசியவாதி, ஜே பி பி மோரே, தமிழாக்கம் முனைவர் ச அ ச சையத் அகமது பிரோசு, ஜமால் முகமது கல்லூரி தன்னாட்சி வெளியீடு திருச்சி. ஜூலை 2023
- இளநிலை இரண்டாம் ஆண்டு நான்காம் பருவம் தமிழ் பாடநூல், முதுகலை தமிழாய்வுத்துறை ஜமால் முகமது கல்லூரி தன்னாட்சி திருச்சி. ஆண்டு 2020.


****